தேவை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவின் பாலகம் அமைத்துத் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

273—

பயணியர் மாளிகை

***40645 திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் பயணியர் மாளிகை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் நகரம் வளர்ந்து*

வரக்கூடிய ஓர் ஊராகும். இது வட்டத் தலைநகரமாக உள்ளது. பல்வேறு அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள ஊர், இந்த ஊர். இதையொட்டி, இங்கே ஏராளமான மக்கள் வந்துபோகிறார்கள். எனவே, கீழ்வேளூரில் ஒரு பயணியர் விடுதி அமைப்பது என்பது மிகவும் அவசியமாகும். எனவே, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்தை மறுபரிசீலனை செய்து ஒரு பயணியர் விடுதி அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் பயணியர் மாளிகை அமைக்கக் கோரும் இடமானது நாகப்பட்டினத்திற்கும், திருவாரூருக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளது. கீழ்வேளூரிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ள நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய இரண்டு மாவட்டத் தலைமையிடங்களிலும் அரசு பயணியர் மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளதால், கீழ்வேளூரில் பயணியர் மாளிகை அமைக்க தற்பொழுது சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியிலுள்ள, கீழ்வேளூர், NH 67 நாகப்பட்டினம்-கூடலூரர் பிரதான சாலையில் அமைந்திருக்கிற வளர்ந்து வரக்கூடிய ஓர் ஊர். நான் முன்பு குறிப்பிட்டதுபோல வட்டத் தலைநகரமாகவும் அது இருக்கிறது. எனது தொகுதியில்தான் வேளாங்கண்ணி பேராலயம் அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வேளாங்கண்ணி பேராலயத்திற்கு வந்து செல்கின்றனர். சமீப காலங்களில் நடைப்பயணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வேளாங்கண்ணிக்கு வந்து செல்கின்றனர். இவர்கள் எல்லாம் பிரதானமாக கீழ்வேளூர் வழியாகவே வந்து போக வேண்டும்.

2015 செப்டம்பர் 16]

எனது தொகுதியில் எட்டுக்குடி முருகன் கோயில் என்ற பிரசித்தி பெற்ற கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். ஏராளமான திருமணங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கீழ்வேளூரில் தற்போது எந்தவிதமான தனியார் தங்குமிடங்களும் இல்லை. கீழ்வேளூரில் தங்கி சில காரியங்களை ஆற்ற வேண்டுமென்று வருகிறவர்கள், தாங்கள் சொன்னதுபோல நாகப்பட்டினம் அல்லது திருவாரூருக்குத்தான் சென்று தங்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு, கீழ்வேளூரிலே ஒரு பயணியர் மாளிகையை அவசியம் கட்டித் தந்தால் என்னையும், எனது தொகுதி மக்களையும் மகிழ்விக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அவசியம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய காலங்களில் அரசு அதிகாரிகள் ஆய்வுப் பணிக்குச் செல்கின்றபொழுது சென்ற இடங்களில் தங்குவதற்கு தகுந்த வசதி இல்லாத காரணத்தினால் பல இடங்களில் பயணியர் விடுதி, ஆய்வு மாளிகைகள் கட்டப்பட்டன. தற்போதைய காலத்தில் அனைத்து நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் நல்ல வசதியுடன் தங்குமிடங்கள் இருப்பதால், பயணியர் விடுதிக்குத் தேவைப்படும் இடங்களை ஆய்வு செய்து தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கீழ்வேளூர் பகுதியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் நாகப்பட்டினம் இருக்கின்றது. அதேபோல அருகிலேயே திருவாரூர் இருக்கின்றது. இரண்டுமே பெரிய நகரங்கள். இரண்டிலுமே அரசு பயணியர் மாளிகை இருக்கின்றது. அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அங்கிருந்து செல்வதற்குக் குறைந்தபட்சம் 20 நிமிடங்கள்தான் ஆகும். ஆக 20 நிமிடங்களில் செல்லக்கூடிய வகையில் அருகில் இருக்கின்ற காரணத்தினாலே, கீழ்வேளூரில் பயணியர் மாளிகை கட்டுவதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் வேண்டிக்கொண்டதற்கிணங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான கவனத்திற்கு*

எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றுகின்ற வகையிலே உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வெற்றி கண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கொடுமுடியிலே நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகை 100 ஆண்டுகளுக்கு மேலான பழைய கட்டடத்தில் இருக்கிறது. அந்தக் கட்டடம் இப்போது பழுதடைந்துள்ளது. அந்தப் பழுதடைந்துள்ள பயணியர் மாளிகை கட்டடத்தை இடித்து அங்கே புதிய பயணியர் மாளிகையை நெடுஞ்சாலைத் துறைமூலம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடுமுடி பகுதியில் ஏற்கெனவே ஓர் ஆய்வு மாளிகை நல்ல நிலையில் இருக்கின்றது. நான் அங்கே சென்று தங்கியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை சீர்செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, சீர் செய்வதற்குண்டான நடவடிக்கையை எடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*